www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2019

வகுப்பு - 6 பதிவு எண்

காலம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 30

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 2×1=2

1. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ............ ஆக இருக்கும்.
   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ............ சுருங்கிவிட்டது.
   அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** 2×1=2

3. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ............ என்று அழைக்கப்படுகின்றன.
4. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ............

**இ) பொருத்துக:** 4×½=2

5. மாணிக்கம் - நிலவு
6. திங்கள் - பாரதியார்
7. பாஞ்சாலி சபதம் - டாக்டர் சலீம் அலி
8. பறவை மனிதர் - பெருஞ்சித்திரனார்

**ஈ) ஏதேனும் இரண்டனுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடையளி:** 2×2=4

9. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
10. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
11. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?
12. வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

**உ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடையளி:** 1×4=4

13. இன்பத்தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.
14. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

**ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:** 1×3=3

15. 'மாமழை போற்றதும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

**எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 3×1=3

16. பிறமொழிக் கலப்பின்றி எழுதுக:
    எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
முத்து தம் ............. காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி / பணி)

18. வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக:
மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்.

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** **1×5=5**

19. உன் வீட்டிலும் வகுப்பறையிலும் பயன்படுத்தும் 20 பொருள்களின் பெயர்களை எழுதுக.

20. கிழவனும் கடலும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

**ஐ) கடிதம் / கட்டுரை எழுதுக:** **1×5=5**

21. விடுப்பு விண்ணப்பம்

**(அல்லது)**

22. 'இயற்கையைக் காப்போம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

--------